**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **ரமணி** | **Caste** | : | |
| **Husband Name** | : | **கணேசன்** | **Calling** | : | **தற்போது எந்த வேலையும் பார்க்கவில்லை.** |
| **Village** | : | **சிறுமலை** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **58** |
| | | | **Dated** | : | **07.01.2025** |

**07.01.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திருமதி.ரமணி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் சிறுமலையில் குடியிருந்து தற்போது வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தின்போது சிறுமலை தென்மலையில் உள்ள அரசு பள்ளியில் துப்புரவு பணியாளராக பணி செய்து வந்தேன். 24.01.2023ம் தேதி காலை 6.00 மணிக்கு RMTC பஸ்ஸில் ஏறி சிறுமலைக்கு சென்றேன். பேருந்து 18 வது பெண்டில் சென்று கொண்டிருந்தபோது பேருந்து கவிழ்ந்துவிட்டது. அதில் எனக்கு இடுப்பில் காயம்பட்டது. பேருந்தில் பயணம் செய்த மற்ற சில நபர்களுக்கும் காயம்பட்டது. எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். ஆஜர் எதிரிதான் அன்றைய தினம் பஸ்ஸை ஓட்டிவந்தார். நான் அரசு மருத்துவமனையில் சிகிக்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டபடும் புகார்

வாக்குமூலத்தில் கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியும்.(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). விபத்திற்கு பிறகு நான் எந்த வேலைக்கு செல்லாமல் நான் வீட்டிலேயே இருந்து வருகிறேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

ஆஜர் எதிரிதான் பேருந்தை ஓட்டிவந்தார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் வழக்கிற்காக பின்னிட்டு பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.01.07 15:09:41 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பேச்சியம்மாள் | **Caste** | : |
| **Husband Name** | : முருகேசன் | **Calling** | : கூலி வேலை |
| **Village** | : அகஸ்தியர்புரம், சிறுமலை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 45 |
| | | **Dated** | : 07.01.2025 |

**07.01.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–3 திருமதி.பேச்சியம்மாள் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் சிறுமலை அகஸ்தியர்புரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். நான் திண்டுக்கல்லுக்கு பொருட்கள் வாங்குவதற்காக வந்திருந்தேன். பொருட்களை வாங்கிவிட்டு 2023 ஜனவரி மாதம் காலை 5.00 மணிக்கு சிறுமலைக்கு RMTC பேருந்தில் ஏறி சிறுமலைக்கு சென்றுகொண்டிருந்தபோது பேருந்து 18 வது பெண்டில் சென்றுகொண்டிருந்ததது. டிரைவர் கவன குறைவாக பேருந்தை பள்ளத்தில் விட்டுவிட்டார். அதில் எனக்கு பின் தலையில் காயம்பட்டது. வலது கண் மற்றும் வலது தோள்பட்டை மற்றும் வலது பகுதியில் காயம்பட்டது. ஆஜர் எதிரி தான் பஸ்சை ஓட்டிவந்தார். என்னுடன் பயணித்த மற்ற நபர்களுக்கும் காயம்பட்டது. அதன்பின்னர் எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துமனைக்கு கொண்டுவந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

18 வது பெண்ட் என்பது கொண்டை ஊசி வளைவு என்றால் சரிதான். 45 கொண்டை ஊசி வளைவுகள் ஏறினால் தான் சிறுமலைக்கு செல்ல முடியும் என்றால் சரிதான்.பொதுவாக ஜனவரி மாதம் சிறுமலையில் பனிமூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரியல்ல. அன்றையதினம் பனிமூட்டம் இல்லை. நான் பேருந்தில் நடுவில் அமர்ந்திருந்தேனா என்றால் 3 வது சீட்டில் கடைசியாக அமர்ந்திருந்தேன். மலையில் இருந்து காய்கறி, பூக்கள் ஏற்றிய வேன்கள் காலை நேரத்தில் திண்டுக்கல்லுக்கு வரும் என்றால் மாலையில் தான் வரும். காலை நேரத்தில் சிறுமலையில் இருந்து திண்டுக்கல்லுக்கு எந்த வண்டியும் வராதா என்றால் பைக்குகள் வரும். சிறுமலையில் காட்டு மாடுகள் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். காட்டு மாடுகள் ரோடு வழியாகவும் அடிக்கடி செல்லும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் பேருந்தின் ஓட்டுனர் கவனகுறைவாக வண்டியை ஓட்டவில்லை என்றால் சரியல்ல. காட்டுமாடுகள் ரோட்டில் குறுக்கிட்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஜனவரி மாதம் என்பதால் அதிக அளவில் பனிமூட்டமும், பனி பொழிவும் இருந்தது என்றால சரியல்ல. எதிரிதான் வண்டியை ஓட்டிவந்தார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. காலை நேரத்தில் காய்கறிகள், பூக்கள் ஏற்றிய வாகனங்கள் அதிகமாக வரும் என்பதை வேண்டுமென்றே மறைத்து காலை நேரத்தில் வாகனங்கள் வராது என்று தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.01.07 15:09:52 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : கணேசன் | **Caste** | : |
| **Father's Name** | : அடைக்கண் | **Calling** | : விவசாயம் |
| **Village** | : தென்மலை, சிறுமலை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 65 |
| | | **Dated** | : 07.01.2025 |

**07.01.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 4 திரு. கணேசன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் சிறுமலை தென்மலையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 24.01.2023 ம் தேதி நான் திண்டுக்கல் அரசு பேருந்து நிலையத்தில் இருந்து சிறுமலைக்கு செல்வதற்காக காலை 5.00 மணிக்கு அரசு பேருந்தில் ஏறினேன். சிறுமலை ரோட்டில் 18 வது பெண்ட் அருகில் சென்று கொண்டிருந்தபோது வாகனம் பள்ளத்திற்குள் இறங்கியது. வாகனத்தை ஓட்டிவந்த நபரை நான் கவனிக்கவில்லை. எனக்கு இடதுக்கை மணிகட்டிலும், நெஞ்சிலும் காயம்பட்டு நான் மயங்கிவிட்டேன். என்னுடன் வந்தவர்களுக்கும் காயம்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

பொதுவாக ஜனவரி மாதம் பனிபொழிவு அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். காட்டுமாடுகள் அதிகமாக சுற்றும் என்றால் சரிதான். சிறுமலையிலிருந்து காலை நேரத்தில் பூக்கள் ஏற்றி வாகனங்கள் அதிகமாக திண்டுக்கல்லை நோக்கி வரும் என்றால் சரியல்ல. காய்கறி ஏற்றிய வாகனங்கள் வரும். நான் பேருந்தில் எந்த பகுதியில் அமர்ந்திருந்தேன் என்றால் முன்னால் இருந்து 3 வது சீட்டில் அமர்ந்திருந்தேன். 18 வது பெண்ட் கொண்டை ஊசி வளைவு என்றால் சரிதான். அதே போல் 45 பெண்ட்கள் ஏறினால் தான் சிறுமலை வரும் என்றால் சரியல்ல. 18 பெண்ட்கள் தான் உள்ளது. எதிரிக்கும், இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.01.07 15:10:02 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : வில்லியார் | **Caste** | : | |
| **Father's Name** | : சின்னதம்பி | **Calling** | : | விவசாயம் |
| **Village** | : தென்மலை, சிறுமலை | **Religion** | : | |
| **Taluk** | : | **Age** | : | 48 |
| | | **Dated** | : | 07.01.2025 |

**07.01.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 5 திரு. வில்லியார் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் சிறுமலை தென்மலையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 24.01.2023 ம் தேதி நான் திண்டுக்கல் அரசு பேருந்து நிலையத்தில் இருந்து சிறுமலைக்கு செல்வதற்காக காலை 5.00 மணிக்கு RMTC பேருந்தில் ஏறினேன். சிறுமலை ரோட்டில் 18 வது பெண்ட் அருகே பனிமூட்டத்தின் காரணமாக பேருந்து ஓட்டுனரின் கட்டுபாட்டை இழந்து பள்ளத்தில் விழுந்தது. அதில் எனக்கு வலது முழங்கையில் காயம்பட்டது. பேருந்தில் பயணம் செய்த மற்ற நபர்களுக்கு காயம்பட்டது. நான் டிரைவர் இருக்கைக்கு பக்கத்தில் தான் இருந்தேன். அதனால் எனக்கு டிரைவரை தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் பேருந்தை ஓட்டினார். எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

காட்டுமாடுகள் குறுக்கிட்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிதான் அரசு பேருந்தை ஓட்டினார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.01.07 15:10:16 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாஸ்கர் | **Caste** | : |
| **Father's Name** | : குருசாமி | **Calling** | : விவசாயம் |
| **Village** | : சிறுமலை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |
| | | **Dated** | : **07.01.2025** |

**07.01.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 8 திரு. பாஸ்கர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் சிறுமலை குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 24.01.2023ம் தேதி நான் திண்டுக்கல் அரசு பேருந்து நிலையத்தில் இருந்து சிறுமலைக்கு செல்வதற்காக காலை 5.00 மணிக்கு அரசு பேருந்தில் ஏறினேன். சிறுமலை ரோட்டில் 18 வது பெண்ட் அருகில் சென்று கொண்டிருந்தபோது பனிமூட்டத்தின் காரணமாகவும், ஓட்டுனரின் அஜாக்கிரதையாலும், வாகனம் பள்ளத்திற்குள் இறங்கியது. எனக்கு வலதுதோள்பட்டையில் 7 எலும்புமுறிவும், பின்னந்தலையிலும் காயம்பட்டது. ஆஜர் எதிரிதான் பேருந்தை ஓட்டி வந்தார். அவர் அன்று தான் புதிதாக அந்த ரூட்க்கு வந்தார். இந்த சம்பவத்தில் பேருந்தில் வந்த மற்ற நபர்களுக்கும் காயம்பட்டது. எனக்கும், ரமணிக்கும் பலத்த காயம்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

18 வது பெண்ட் கொண்டை ஊசி வளைவு என்றால் சரிதான். நான் பேருந்தில் எத்தனையாவது சீட்டில் இருந்தேன் என்றால் 3 வது சீட்டில் இருந்தேன். காட்டுமாடுகள் அதிகமாக சுற்றும் என்றால் சரிதான். எதிரி வாகனத்தை ஓட்டிவந்ததாகவும், அவர் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டிவந்ததாகவும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. காட்டுமாடுகள் குறுக்கே வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.01.07 15:10:29 +0530

Judicial Magistrate No.I
Dindigul.